1979 ஏப்ரல் 16]

இணைப்பு II.

[644ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 711-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாடு மருத்துவப்பணியில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளுக்கு மேற்படிப்பின்/மேற்பயிற்சியின் நிமித்தம் வெளி நாடு சென்று வர, சம்பளமில்லா சிறப்பு விடுப்பு அளிக்கப்படும். இவ்விடுப்பு கோருவோர், விடுப்பு முடிந்ததும் திரும்ப வந்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, ஒரு குறிப்பிட்ட காலம் வரை தமிழ்நாடு அரசில் பணியாற்றுவதாகவும், அப்படி பணியாற்றத் தவறினால், ரூ. 50,000 அரசிற்கு செலுத்திவிடுவதாகவும் இரண்டு பேர் பிணையத்துடன் ஒரு பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.

விடுப்பின் கால அளவு.	கட்டுப்படுத்தும் கால அளவு.	பிணைமுறியின் பணம்.
1 ஆண்டு வரை.	10 ஆண்டுகள்.	
1 முதல் 2 ஆண்டுகள் வரை.	11 ஆண்டுகள்.	
2 முதல் 3 ஆண்டுகள் வரை.	12 ஆண்டுகள்.	ரூ. 50,000.
3 முதல் 4 ஆண்டுகள் வரை.	13 ஆண்டுகள்.	
4 முதல் 4½ ஆண்டுகள் வரை.	14 ஆண்டுகள்.	

வெளிநாடுகளில் இருப்போரின் விடுப்பு நீடிப்பு கோரிக்கையும் மேற்சொன்ன வரையறைக்கு உட்பட்டு ஒரு திருத்திய பிணை முறை கொடுத்தால்தான் பரிசீலிக்கப்படும். சாதாரணமாக நாலரையாண்டுகளுக்கு மேல் யாருக்கும் விடுப்பு நீட்டித்துத் தரப்படமாட்டாது.

இது போன்ற விடுப்புக் கோருவோரின் கோரிக்கைகளை அதற்குரிய ஆவணங்களையும், அயல்நாட்டு நிறுவனத்தாரால் எழுதப்பட்ட பயிற்சி சம்பந்தப்பட்ட ஆதாரக் கடிதங்களையும் அப்பயிற்சியின் கால அளவையும், அப்பயிற்சி நமது நாட்டிற்கு உபயோகப்படுமா என்பதையும். விடுப்புக்கோரும் மருத்துவரின் திரும்ப வருவதற்கேற்றார்போல் அயல்நாட்டு நுழைவிசைவையும் பெற்றிருக்கிறாரா என்பதையும் துறைத்தலைவர்களால் நன்கு பரிசீலிக்கப்படவேண்டும். ஒரு மருத்துவருக்கு விடுப்பு அளிக்கப் படலாமென துறைத்தலைவர் பரிந்துரை அனுப்பும் பொழுது கீழ்க் கண்ட சான்றிதழ்களை அவர் கொடுக்கவேண்டும்.

(1) விடுப்பு கோரும் மருத்துவ அதிகாரி மருத்துவம் குறித்த மேற்படிப்பிற்குத்தான் செல்கிறார்;

(2) அவர் கோரியிருக்கும் விடுப்பு கால அளவு மேற்படிப்பு/ மேற்பயிற்சிக்குத் தேவையானது;

[1979 ஏப்ரல் 16

(3) இம் மேற்பயிற்சி/படிப்பு நம் மாநிலத்திற்குத் தேவையானது;

(4) விடுப்பு முடிந்ததும் இந்த மருத்துவ அதிகாரி தமிழ்நாடு மருத்துவப்பணிக்குத் திரும்பவரும் வாய்ப்பு உள்ளது.

விடுப்பு நீட்டித்தர வேண்டியது குறித்து அனுப்பப்படும் கருத்துக்களுடனும் மேற்சொன்ன சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

ஊர் சுற்றிப்பார்த்து வரவோ, சுற்றத்தாரை நண்பர்களைப் பார்த்து வரவோ, மத சம்பந்தப்பட்ட ஊர்களுக்கு யாத்திரை சென்றுவரும் பொருட்டோ, மருத்துவ வசதி பெறும் பொருட்டோ வெளிநாடு செல்வோருக்கு 6 மாதங்கள் வரை விடுப்புக் கொடுக்கப்படும். இவர்கள் விடுப்பு முடிந்ததும் திரும்ப வந்து இவ்வரசில் 10 ஆண்டுகள் பணி புரிவதாகவும் அப்படி திரும்ப வரத் தவறினால் இவ்வரசிற்கு ரூ. 50,000 செலுத்தி விடுவதாக இரண்டு ஆள் பிணையத்துடன் ஒரு பிணைமுறி கொடுக்க வேண்டும். ஆறு மாதங்களுக்கு மேல் யாருக்கும் விடுப்புக் கொடுக்கப்படமாட்டாது.